### பெரியாழ்வார் அருளிச் செய்த

# பெரியாழ்வார் திருமொழி 2-7 - ஆநிரை[1]

### (கண்ணனைப் பூச்சூட அழைத்தல்)

182 * ஆநிரை மேய்க்க நீ போதி * அருமருந்து ஆவதறியாய் *
கானகம் எல்லாம் திரிந்து * உன் கரிய திருமேனி வாட **
பானையில் பாலைப் பருகிப் * பற்றாதார் எல்லாம் சிரிப்ப *
தேனில் இனிய பிரானே! * செண்பகப் பூச்சூட்ட வாராய் 1

183 கருவுடை மேகங்கள் கண்டால் * உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள் *
உருவுடையாய்! உலகேழும் * உண்டாக வந்து பிறந்தாய்! *
திருவுடையாள் மணவாளா! * திருவரங்கத்தே கிடந்தாய்! *
மருவி மணம் கமழ்கின்ற * மல்லிகைப் பூச்சூட்ட வாராய் 2

184 மச்சொடு மாளிகை ஏறி * மாதர்கள் தம்மிடம் புக்கு *
கச்சொடு பட்டைக் கிழித்துக் * காம்பு துகிலவை கீறி **
நிச்சலும் தீமைகள் செய்வாய்! * நீள் திருவேங்கடத்து எந்தாய்! *
பச்சைத் தமனகத்தோடு * பாதிரிப் பூச்சூட்ட வாராய் 3

185 தெருவின்கண் நின்று இளவாய்ச்சிமார்களைத் * தீமை செய்யாதே *
மருவும் தமனகமும் சீர் * மாலை மணம் கமழ்கின்ற **
புருவம் கருங்குழல் நெற்றி * பொலிந்த முகிற் கன்று போலே *
உருவம் அழகிய நம்பீ! * உகந்திவை சூட்ட நீ வாராய் 4

186 புள்ளினை வாய் பிளந்திட்டாய்! * பொருகரியின் கொம்பொசித்தாய்! *
கள்ள அரக்கியை மூக்கொடு * காவலனைத் தலை கொண்டாய்! **
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க * அஞ்சாது அடியேன் அடித்தேன் *
தெள்ளிய நீரில் எழுந்த * செங்கழுநீர் சூட்ட வாராய் 5

187 எருதுகளோடு பொருதி * ஏதும் உலோபாய் காண் நம்பி! *
கருதிய தீமைகள் செய்து * கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்! **
தெருவின்கண் தீமைகள் செய்து * சிக்கென மல்லர்களோடு *
பொருது வருகின்ற பொன்னே! * புன்னைப் பூச்சூட்ட வாராய் 6

188 குடங்கள் எடுத்தேற விட்டுக் * கூத்தாட வல்ல எம் கோவே! *
மடங்கொள் மதி முகத்தாரை * மால் செய்ய வல்ல என் மைந்தா! **
இடந்திட்டு இரணியன் நெஞ்சை * இரு பிளவாக முன் கீண்டாய்! *
குடந்தைக் கிடந்த எம்[2] கோவே! * குருக்கத்திப் பூச்சூட்ட வாராய் 7

189 சீமாலிகன் அவனோடு * தோழமை கொள்ளவும் வல்லாய்! *

---

[1] இது நித்யாநுஸந்தாநம்
[2] என்

சாமாறு அவனை நீ எண்ணிச் * சக்கரத்தால் தலை கொண்டாய்! **
ஆமாறறியும் பிரானே! * அணி அரங்கத்தே கிடந்தாய்! *
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்! * இருவாட்சிப் பூச்சூட்ட வாராய் 8

190 அண்டத்தமரர்கள் சூழ * அத்தாணியுள் அங்கிருந்தாய்! *
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்! * தூமலராள் மணவாளா! **
உண்டிட்டு உலகினை ஏழும் * ஓர் ஆலிலையில்[3] துயில் கொண்டாய்! *
கண்டு நான் உன்னை உகக்கக் * கருமுகைப் பூச்சூட்ட வாராய் 9

191 * செண்பக மல்லிகையோடு * செங்கழுநீர் இருவாட்சி *
எண்பகர் பூவும் கொணர்ந்தேன் * இன்று இவை சூட்ட வா என்று **
மண்பகர் கொண்டானை * ஆய்ச்சி மகிழ்ந்துரை செய்த இம்மாலை *
பண்பகர் வில்லிபுத்தூர்க் கோன் * பட்டர் பிரான் சொன்ன பத்தே 10

**அடிவரவு:** ஆநிரை கரு மச்சொடு தெருவின்கண் புள்ளினை எருதுகளோடு
குடங்கள் சீமாலிகன் அண்டத்து செண்பகம் இந்திரன்

[3] ஆலிலைத்